## 22.2.2026 ஞாயிற்றுக்கிழமை, கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில்

# கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. இளைஞர் அணி மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு!

## தலைமைக் கழகம் அறிவிப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் உத்தரவின்பேரில், தலைமைக் கழக அனுமதியுடன் கழக இளைஞர் அணிக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கிளை - வார்டு - பாகங்களில் நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட 28 மாவட்டங்கள் - 91 சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 1,50,000 நிர்வாகிகளை திருவண்ணாமலையிலும் -

தென் மண்டலத்துக்கு உட்பட்ட 20 கழக மாவட்டங்கள் - 58 சட்டமன்ற தொகுதிகளைச் சேர்ந்த 1,00,000 நிர்வாகிகளை விருதுநகரிலும் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் தலைமையில்;

கழகத் துணைப் பொதுச்செயலாளர்கள் ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் முன்னிலையில், கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி அவர்கள் வரவேற்புரையாற்றிட; , மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா தலைவர் - தாட்கோ, ப.அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொள்ள;

வருகிற **22.02.2026** ஞாயிற்றுக்கிழமை, மாலை 3.00 மணி அளவில், **கோவை, கருமத்தம்பட்டி, கணியூர் டோல்கேட் அருகில் "மேற்கு மண்டல தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு"** நடைபெற உள்ளது.

இதில், மேற்குமண்டலத்தைச் சேர்ந்த கழக மாவட்டத்திற்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், கிளை மற்றும் வாக்குச்சாவடி அளவிலான இளைஞர் அணி நிர்வாகிகள் வெண்சீருடை அணிந்து வரலாறு படைத்திட, அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இளைஞர் அணி நிர்வாகிகளை "மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பிற்கு" அழைத்து வரும் பொறுப்பினை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வரலாறு படைக்கப் போகும் இந்த "தி.மு.க. இளைஞர் அணி மேற்குமண்டல நிர்வாகிகள் சந்திப்பில்" மாண்புமிகு அமைச்சர் பெருமக்களான சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, டாக்டர் மா.மதிவேந்தன், திருமதி என்.கயல்விழி செல்வராஜ்;

மாவட்டச்செயலாளர்கள்/பொறுப்பாளர்களான தளபதி முருகேசன், தொ.அ.ரவி, மேயர் என்.தினேஷ்குமார், க.செல்வராஜ், எம்.எல்..ஏ., இல.பத்மநாபன், கே.ஈஸ்வரசாமி, எம்.பி., என்.நல்லசிவம், கே.ஆர்.என். இராஜேஷ்குமார்,எம்.பி., கே.எம்.ராஜு, தோப்பு வெங்கடாசலம், கே.எஸ்.மூர்த்தி, துரை. செந்தமிழ்செல்வன்;

மாநகரச் செயலாளர்களான மு.சுப்பிரமணியம், டி.கே.டி.மு.நாகராசன், ஈ.தங்கராஜ், எஸ்.பி.கனகராஜ்,

நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களான கணபதிராஜ் குமார், எம்.பி., கே.ராமச்சந்திரன், எம்.எல்.ஏ., வி.சி.சந்திர குமார், எம்.எல்.ஏ., ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., ரா.இளங்கோ, எம்.எல்.ஏ., பி.ராமலிங்கம், எம்.எல்.ஏ., திருமதி கே.சிவகாமசுந்தரி, எம்.எல்.ஏ, ஆர்.மாணிக்கம், எம்.எல்.ஏ.,

மேற்குமண்டல இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர்களான சபரிகார்த்திகேயன், எம்.ஏ.ஆர்.கே. ஹக்கீம், இரா.தனபால், மு.ஜெயக்குமார், ஜெ.திருவாசகம், ஏ.திருவேங்கடம், சன் சுரேஷ், சி.விஸ்வநாத், ஆர். பாலாஜி, வெங்கமேடு சக்திவேல், இமயம் சசிக்குமார்,

மாநகர அமைப்பாளர்களான எம்.எஸ்.ஆர்.ராஜு, முத்துக்குமார், கே.டி.சேந்தபுகழன், கராத்தேபூபதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் அவர்கள் நன்றியுரையாற்றுகிறார்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018.
நாள் : 18.2.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

மண்டலம் 1 – 2 க்குட்பட்ட சில பகுதிகளில்

# குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம்!

*சென்னை,பிப்.19-*

*மாதாவரம், ரெட்ஹில்ஸ் சாலை ஜே.கே.மஹால் அருகில் பிரதான குடிநீர் குழாய் இணைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 20.02.2026 அன்று இரவு 10.00 மணி முதல் 21.02.2026 காலை 10.00 மணி வரை (12 மணி நேரம்) திருவெற்றியூர் குடிநீர் பகிர்மான நிலையம் மற்றும் மாதவரம் பூஸ்டர் குடிநீர் பகிர்மான நிலையம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும்.*

*ஆகையால், மண்டலம்-1 (திருவெற்றியூர்), மற்றும் மண்டலம்2 (மணலி)க்குட்பட்ட கீழ்கண்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படுகிறது.*

*மண்டலம் வார்டு எண். பகுதிகள் மண்டலம்1 (திருவெற்றியூர்) 4 6 7 எர்ணாவூர் ராஜா சண்முக நகர், கார்கில் நகர் மண்டலம்2 (மணலி) 15 16 18,21 19 மணலி புதுநகர் நாபாளையம், சடையான் குப்பம், ஆண்டார்குப்பம், துவாரகா நகர், மணலி மாத்தூர்*

*எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.*

*மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.*




